This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# சிறுகதை எழுதுவது எப்படி?

www.writersujatha.com

**ஒரு அரிய வாய்ப்பு! நீங்கள் நல்ல சிறுகதைகள் எழுத விரும்புகிறீர்களா? குமுதம், குங்குமம், சாவி, இதயம், கல்கி போன்ற முன்னணி இதழ்களில் உங்கள் சிறுகதைகள் பிரசுரமாக வேண்டுமா? சுஜாதாவிடம் கற்றுக் கொள்ளத் தொடர்பு கொள்ளுங்கள்: த.பெட்டி எண்:** 2355

சமீபத்தில் இந்த வெளம்பரத்தை தினமணில பாத்திருப்பீங்களே. ரெண்டாம் பக்கத்தில ஒரு ஓரத்தில ஏல விளம்பரம், கோர்ட்டு நோட்டீஸ் இதுக்கெல்லாம் மத்தியில பொடி எழுத்தில் வந்தது. இதைப் பார்த்ததும் என் இதயம் ஒரு தபா துடிக்கிறதை நிறுத்திட்டு நின்று போய் அப்புறம் படபடன்னு அடிச்சுக்கிச்சி!

ஸார், நானும் இதுவரைக்கும் தொண்ணூறு சிறுகதை எழுதிட்டேன். ஒண்ணுகூட பிரசுரமாகலை! அப்படிப்பட்டவனுக்கு அந்த மாதிரி விளம்பரத்தைப் பார்த்தா என்ன மாதிரி இருக்கும்? நான் யாரு சொல்லிடறேன். என் பேரு ராஜரத்தினம். ஓல்ஸேல் வியாபாரம் மிளகாய், வெல்லம்னு செஞ்சு நிறையத்தான் சம்பாதிக்கிறேன், ஆனா என் நெஞ்சில ஒரு பெரிய ஓட்டை இருக்குது பிரதர். அதான் இந்த ஏக்கம்... அதை என்னான்னு சொல்வேன்–இச்சை, தாபம், தாகம்? என் கதை ஒண்ணுகூட இதுவரைக்கும் அச்சேறலையேன்னு ஏக்கம், எம்மேலயே எனக்கு ஒரு வெறுப்பு...

ஆனா நான் எழுதினது ஒண்ணுமே இதுவரைக்கும் பிரசுரமானதில்லையான்னு கேட்டா ஆயிருக்குதுன்னுதான் சொல்வேன். ஒருதபா ஆசிரியருக்குக் கடிதத்தில் "காமத்தீ என்கிற கதைக்கு ஜெயராஜ் படம் ரொம்ப ஓவர் ஸார்! ச.ராஜரத்தினம்–"னு ஒரு லெட்டர் போட்டு ஒரு காப்பிகூட ஃப்ரீயா அனுப்பிச்சாங்க. அப்புறம் "பராசக்தியாரே! கருணை பெரியதா, காதல் பெரியதா?"ன்னு ஒரு கேள்வி–பதில் வந்திருந்தது என் பேர் போட்டு. ஆனா இதெல்லாம் போதுமா? நாலு பக்கம், அஞ்சு பக்கம் கதை எழுதி ஜெயராஜ், ம.செ., மாருதி, ராமு யாராவது படம் போட்டு வரவேண்டாமா? வந்து, அதை நான் பத்து பிரதி வாங்கி நண்பர்களுக்கெல்லாம் காட்டி, "பாத்திங்களாடா? நான் எழுதினது வந்திருக்கு. நான் யார் தெரியுமா? எழுத்தாளன், சிந்தனைச் சிற்பி"ன்னு சொல்லிக்க வேண்டாமா? வரலியே! என் இலக்கிய முயற்சிங்களுக்கு வடிகால் தர இந்தப் பத்திரிகைத் தே–மகனுங்க மறுக்கறாங்களே! திருப்பித் திருப்பி அனுப்பிடறாங்களே!

நானும் என்ன என்னமோ செய்து பார்த்தேன். முதல்ல 'அரசமணி'ன்னு புனைபெயர்ல அனுப்பிச்சேன். அப்புறம் 'ஜே.மனோன்மணி திருநாவுக்கரசு'ன்னு ஃபாஷனா பேர் வெச்சுக்கிட்டேன். அப்புறம் 'எலுமிச்சை'ன்னு பேர்ல நகைச்சுவை எழுதிப் பார்த்தேன்... ம்ஹூம்.

தபால் பொட்டிங்களை மாத்திப் பார்த்தேன். இடது கையால தபால்ல சேர்த்துப் பார்த்தேன். நம்ம ஃப்ரெண்டு சைனா பஜார்ல அட்லாஸ் சைக்கிள் ஏஜன்ஸி எடுத்திருக்கான் – செல்வராஜுன்னு – அவனைவிட்டு தபால்ல சேர்த்துப் பார்த்தேன். பயன் இல்லை.